**தெருவிளக்கு அமைக்க மின்சார வாரியம் மற்றும் விளக்கு பொருத்தும் பணிகளுக்கான விபரம்**

| வ.எண் | விவரங்கள் | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1 | விளக்கு மட்டும் ஏற்படுத்தி பயன்படுத்தும் இடங்கள் | 30 x 7000 | 2,10,000 |
| 2 | மின்பாதை அமைத்து விளக்கு ஏற்படுத்தும் இடங்கள் | 53 x 15000 | 7,95,000 |
| 3 | புதிய கம்பம் மின்பாதை விளக்கு ஏற்படுத்தும் இடங்கள் | 2 x 35000 | 70,000 |
| 4 | புதிய சுவிட்ச் அமைத்து இணைப்பு பெறும் இடங்கள் | 5 x 7000 | 35,000 |

மேற்கண்டவாறு பணிகள் செய்து மின்சார வாரியம் மூலம் பதிவு மற்றும் மதிப்பீட்டு கட்டணம் செலுத்தி ஒப்பந்ததாரர் மூலம் புதிய தெருவிளக்குகள் ஏற்படுத்தி பயன்படுத்திக்கொள்ள ஆக கூடிய உத்தேச மதிப்பிட்டு தொகை ரூ. 11.00 லட்சத்திற்கு பணியினை மேற்கொள்ளவும் மாமான்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

**1.**மாமன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்கண்ட பணிக்கான உத்தேச மதிப்பிட்டு தொகை ரூ.**11.00** லட்சத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(7703 /2025/இ3)**

**தீர்மான எண்.2809** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**26.**கரூர் மாநகராட்சி மண்டலம்–4 மண்டல தலைவர் அவர்களின் கடிதத்தில் வார்டு **36,37,43,44,45,46,47** மற்றும் **48** பகுதிகளில் உள்ள தெருகளில் பொதுமக்களின் பயன்பாட்டிற்க்காக புதிய தெருவிளக்குகள் அமைத்து தர கோரப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இப்பணிக்காக கீழ்கண்ட உள்ள இடங்கள் ஆய்வு செய்து மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | சாலையின் பெயர் |
|---|---|
| 1 | வார்டு எண்.36 மணகளம் 3 தெருகள்,அக்ரஷாரம் டேங்க் |
| 2 | வார்டு எண்.37 மில்கேட்,அண்ணா நகர்,பூங்கா நகர்,பவானி நகர் |
| 3 | வார்டு எண்.43 வெங்கடேஷ்வரா நகர், சிவசக்தி நகர்,முகாம் தென்புற MCC லைன் |
| 4 | வார்டு எண்.44 ஐஸ்வர்யா கார்டன், சத்தியமூர்த்தி நகர்,வெள்ளகவுண்டன் நகர் |
| 5 | வார்டு எண்.45 ராயனூர் பெட்ரோல் பங்க் பின்புறம்,மாவடியான் கோவில். |
| 6 | வார்டு எண்.46 செல்லாண்டிபாளையம்,RKG நகர், கொங்கு அவன்யு, |
| 7 | வார்டு எண்.47 கோடங்கிபட்டி, சாரதா காலேஜ் பஸ்டாப் தென்புறம். |
| 8 | வார்டு எண்.48 கிரேப் கார்டன்,ரோஜா நகர்,ஊரணிமேடு, பொன்காளியம்மன் நகர் |

**தெருவிளக்கு அமைக்க மின்சார வாரியம் மற்றும் விளக்கு பொருத்தும் பணிகளுக்கான விபரம்**

| வ.எண் | விவரங்கள் | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1 | விளக்கு மட்டும் ஏற்படுத்தி பயன்படுத்தும் இடங்கள் | 35 x 7000 | 2,45,000 |
| 2 | மின்பாதை அமைத்து விளக்கு ஏற்படுத்தும் இடங்கள் | 50 x 15000 | 7,50,000 |

| | | | |
|---|---|---|---|
| 3 | புதிய கம்பம் மின்பாதை விளக்கு ஏற்படுத்தும் இடங்கள் | 2 x 35000 | 70,000 |
| 4 | புதிய சுவிட்ச் அமைத்து இணைப்பு பெறும் இடங்கள் | 5 x 7000 | 35,000 |

மேற்கண்டவாறு பணிகள் செய்து மின்சார வாரியம் மூலம் பதிவு மற்றும் மதிப்பீட்டு கட்டணம் செலுத்தி ஒப்பந்ததாரர் மூலம் புதிய தெருவிளக்குகள் ஏற்படுத்தி பயன்படுத்திக்கொள்ள ஆக கூடிய உத்தேச மதிப்பிட்டு தொகை ரூ. 11.00 லட்சத்திற்கு பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1.மாமன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கான உத்தேச மதிப்பிட்டு தொகை ரூ.11.00 லட்சத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(7702/2025/இ3)**

**தீர்மான எண்.2810** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

27.கரூர் மாநகராட்சி மண்டலம்–2 மண்டல தலைவர் அவர்களின் கடிதத்தில் வார்டு 20,21,22,23,24,25,26,27, 29,30,31,32,33,34 மற்றும் 35 பகுதிகளில் உள்ள தெருகளில் பொதுமக்களின் பயன்பாட்டிற்க்காக புதிய தெருவிளக்குகள் அமைத்து தர கோரப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இப்பணிக்காக கீழ்கண்ட உள்ள இடங்கள் ஆய்வு செய்து மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | சாலையின் பெயர் |
|---|---|
| 1 | வார்டு எண்.20 வ.உ.சி தெரு, மாவடியான் கோவில், கண்ணார சந்து தெரு |
| 2 | வார்டு எண்.21 தேர்வீதி, வெள்ளைப்பச்சந்து, கி.நஞ்சை தெரு |
| 3 | வார்டு எண்.22 அனுமந்தராயன் கோவில் தெரு, நீலிமேடு, இரத்தினம் சாலை F3 சாலை |
| 4 | வார்டு எண்.23 தெற்கு மடவிளாகம், காசிம் தெரு, அன்சாரி தெரு, பிரதட்சணம் ரோடு |
| 5 | வார்டு எண்.25 80அடி சாலை, செங்குந்தபுரம் 2வது கிராஸ், காந்திபுரம் பிள்ளையார் கோவில் லைன் |
| 6 | வார்டு எண்.24 செங்குந்த புறம் 9வது கிராஸ், 50 அடி சாலை, ராமகிருஷ்ணபுரம் வடக்கு |
| 7 | வார்டு எண்.26 அண்ணா சாலை, குகைவழிப்பாதை KVB நகர், கணோச நகர் |
| 8 | வார்டு எண்.27 வையாபுரி நகர் 2, 3 மற்றும் 1வது கிராஸ் |
| 9 | வார்டு எண்.29 அண்ணா நகர் மேற்கு, எம்.ஜி.ஆர்.நகர் மேற்கு |
| 10 | வார்டு எண்.30 அண்ணா நகர் வாட்டர் டேங்க், கௌரிபுரம் விஸ்தரிப்பு, கௌரிபுரம் விநாயகர் கோவில் |
| 11 | வார்டு எண்.31 திருப்பதி லே அவுட், பசுபதி லே அவுட், வாய்க்கால் ஓரம் |
| 12 | வார்டு எண்.32 முத்துராஜபுரம், நரசிம்மபுரம் பி–பிளாட், உழவர் சந்தை வடபுறம் |
| 13 | வார்டு எண்.33 படிகட்டுத்துறை, ஈவேரா சாலை, அண்ணாஜீராவ் சந்து, கீரைகார தெரு |
| 14 | வார்டு எண்.34 காமராஜ் ரோடு, மக்கள்பாதை, திண்டுக்கல் ரோடு கழிவுநீரேற்ற நிலையம் அருகில் |
| 15 | வார்டு எண்.35 பெருமாள் கோவில் இறக்கம், வஞ்சியம்மன் கோவில் மேட்டு தெரு |

**தெருவிளக்கு அமைக்க மின்சார வாரியம் மற்றும் விளக்கு பொருத்தும் பணிகளுக்கான விபரம்**

| வ.எண் | விவரங்கள் | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1 | விளக்கு மட்டும் ஏற்படுத்தி பயன்படுத்தும் இடங்கள் | 50 x 7000 | 3,50,000 |
| 2 | மின்பாதை அமைத்து விளக்கு ஏற்படுத்தும் இடங்கள் | 5 x 15000 | 75,000 |
| 3 | புதிய கம்பம் மின்பாதை விளக்கு ஏற்படுத்தும் இடங்கள் | 1 x 7000 | 7,000 |
| 4 | புதிய சுவிட்ச் அமைத்து இணைப்பு பெறும் இடங்கள் | 4 x 75000 | 3,00,000 |

மேற்கண்டவாறு பணிகள் செய்து மின்சார வாரியம் மூலம் பதிவு மற்றும் மதிப்பீட்டு கட்டணம் செலுத்தி ஒப்பந்ததாரர் மூலம் புதிய தெருவிளக்குகள் ஏற்படுத்தி பயன்படுத்திக்கொள்ள ஆக கூடிய உத்தேச மதிப்பிட்டு தொகை ரூ. 8.00 லட்சத்திற்க்கு பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1.மாமன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட பணிக்கான உத்தேச மதிப்பிட்டு தொகை ரூ.8.00 லட்சத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(7705/2025/இ3)**

**தீர்மான எண்.2811** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**28.**கரூர் மாநகராட்சி மண்டலம் **–1** மண்டல தலைவர் அவர்களின் கடிதத்தில் வார்டு **1** முதல் **11** மற்றும் **28**பகுதிகளில் உள்ள தெருகளில் பொதுமக்களின் பயன்பாட்டிற்க்காக புதிய தெருவிளக்குகள் அமைத்து தர கோரப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து இப்பணிக்காக கீழ்கண்ட உள்ள இடங்கள் ஆய்வு செய்து மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **சாலையின் பெயர்** |
|---|---|
| 1 | வார்டு எண்.1 கோதூர் பகுதிகள் என்.ஜி.பி. நகர் |
| 2 | வார்டு எண்.2 பிள்ளையார் கோவில் கிழக்கு, குளத்துப்பாளையம் பள்ளி அருகில் |
| 3 | வார்டு எண்.3 நவீன் நகர், ஜவஹர் நகர் |
| 4 | வார்டு எண்.4 பாலகிருஷ்ணா நகர், தீரன் நகர் |
| 5 | வார்டு எண்.5 எம்.கே.நகர், சிட்டி கார்டன், கொங்கு நகர் |
| 6 | வார்டு எண்.6 கருப்பண்ணசாமி கோவில் தெரு, நேரு நகர், செங்குந்தர் நகர் கிழக்கு |
| 7 | வார்டு எண்.7 சிவலிங்கஆசாரித்தெரு, டி.எச்.ஓ. தெரு, குமரப்பா கவுண்டர் தெரு |
| 8 | வார்டு எண்.8 அண்ணாத்தெரு, திட்டசாலை |
| 9 | வார்டு எண்.9 பிட்டர் பழனியப்பா தெரு, அங்கப்பன்தெரு, வள்ளுவர் நகர் |
| 10 | வார்டு எண்.10 கலைஞர் காலனி, விவேகானந்தா தெரு, பழைய போஸ்ட் ஆபிஸ் வீதி |
| 11 | வார்டு எண்.11 பாலம்மாள்புரம் இரயில்வே மேம்பாலம் வடக்குத்தெரு |
| 12 | வார்டு எண்.28 வடிவேல் நகர், போலீஸ் கோட்டர்ஸ் அருகே சந்து, வேலுச்சாமிபுரம், திருக்காம்புலியூர் உள்ள மெஸ் எதிர் |

**தெருவிளக்கு அமைக்க மின்சார வாரியம் மற்றும் விளக்கு பொருத்தும் பணிகளுக்கான விபரம்**

| **வ.எண்** | **விவரங்கள்** | **எண்ணிக்கை** | **தொகை** |
|---|---|---|---|
| 1 | விளக்கு மட்டும் ஏற்படுத்தி பயன்படுத்தும் இடங்கள் | 40 x 7000 | 2,80,000 |
| 2 | மின்பாதை அமைத்து விளக்கு ஏற்படுத்தும் இடங்கள் | 25 x 15000 | 3,75,000 |
| 3 | புதிய கம்பம் மின்பாதை விளக்கு ஏற்படுத்தும் இடங்கள் | 4 x 35,000 | 1,40,000 |
| 4 | புதிய சுவிட்ச் அமைத்து இணைப்பு பெறும் இடங்கள் | 3 x 7000 | 21,000 |

மேற்கண்டவாறு பணிகள் செய்து மின்சார வாரியம் மூலம் பதிவு மற்றும் மதிப்பீட்டு கட்டணம் செலுத்தி ஒப்பந்ததாரர் மூலம் புதிய தெருவிளக்குகள் ஏற்படுத்தி பயன்படுத்திக்கொள்ள ஆக கூடிய உத்தேச மதிப்பிட்டு தொகை ரூ. 8.25 லட்சத்திற்க்கு பணியினை மேற்கொள்ள மாமான்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

**1.**மாமன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்கண்ட பணிக்கான உத்தேச மதிப்பிட்டு தொகை ரூ. **8.25** லட்சத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(7704/2025/இ3)**

**தீர்மான எண்.2812** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**29.** கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான திண்டுக்கல் சாலை இரும்பு பெட்டிக்கடை வரிவிதிப்பு எண்.082/20000195–க்கான குத்தகை உரிமத்தினை திரு.எட்டியப்பன் என்பவரது பெயரிலிருந்து திரு.வே.கதிரவன் பெயருக்கு மாற்றம் செய்து தரக்கோரியுள்ளார்.

அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறை நாள்.03.072007–ன் பத்தி எண்.5ல் அனுமதியற்ற அனுபோகதார்கள்ளின் நேர்வில் ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை அவர்களுடைய பெயரில் மாற்றித்தரலாம். இதற்காக விண்ணப்பதாரர் 12 மாதங்களுக்குரிய மாதாந்திர குத்தகை தொகைக்கு சமமான தொகையை முன்பணமாக செலுத்த வேண்டும். இது தவிர, கீழே குறிப்பிட்டுள்ள குறைந்த அளவு தொகைக்குட்பட்டு, 12 மாதவாடகைக்கு சமமான தொகையை பெயர் மாற்றக் கட்டணமாகவும் செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1) < 100 ச.அ ரூ.2500/—(ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்)
2) 100 – 500 ச.அ ரூ.5000/—(ரூபாய்து ஐயாயிரம் மட்டும்)
3) 500 – 1000 ச.அ ரூ.7500/—(ரூபாய் ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்)
4) >1000 ச.அ ரூ.10000/—(ரூபாய்பத்தாயிரம் மட்டும்)

மேற்கண்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, விண்ணப்பதாரர் திரு.வெ.கதிரவன் என்பவர் பெயர் மாற்றம் தொடர்பான 12 மாதவாடகை, வைப்புத்தொகை ரூ.55548/—ஐ ரசீது எண்.082/01/2/21–22/0007656, நாள்.19.11.2021, ரூ.48300/— மற்றும் 082/01/5/25–26/0004600, ரூ.7248/— நாள்.19.11.2025 ஆக மொத்தம் ரூ.55548/— செலுத்தியுள்ளார். மேலும் பெயர்மாற்ற கட்டணமாக 12மாத வாடகை முன்பணத்தொகை ரூ.55548/—ஐ ரசீது எண்.082/01/2/21–22/0007655, நாள்.19.11.2021, ரூ.48300/— மற்றும் 082/01/5/25–26/0004601, நாள்.19.11.2021, ரூ.7248/— ஆக மொத்தம் ரூ.55548/— மாநகராட்சி கருவூலகத்தில் செலுத்தியுள்ளார். மேலும் பெயர் மாற்றம் செய்வதற்கான கட்டணம் ரூ.5000/— செலுத்தியுள்ளார்.

எனவே பெயர் மாற்றம் செய்து தரக்கோரியுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மாமன்றம் பரிசீலனை செய்து முடிவு செய்யலாம். **(5086/2020/அ6)**

**தீர்மான எண்.2813**

**30.** கரூர் மாநகராட்சி பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு 2025–2026ம் ஆண்டு வரவு செலவு திட்ட நிதியில் கீழ்கண்ட கணக்கு குறியீட்டில் தொகை குறைவாக உள்ள விபரம் பின்வருமாறு.

**குடிநீர் நிதி**

| வ.எண் | கணக்கு குறியீட்டு எண் | கணக்கு தலைப்பு | 2025–2026 வரவு செலவு மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 2305009 | குடிநீர் பராமரிப்பு பணிகள் | 300.00 |

மேற்காணும் இனத்திற்கு எதிராக குறிப்பிட்டுள்ள செலவினத்திற்கு 2025–2026ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் உரிய தலைப்பில் சேர்ப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மாமன்றம் அனுமதிக்கலாம் **(பி1/6122/ 2025)**

**தீர்மான எண்.2814** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**31.**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –1க்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 11 மற்றும் 28 பகுதிகளில் உள்ள சாலைகள் தற்போது புதிதாக பாதாள சாக்கடை குடிநீர் இணைப்புகள் மற்றும் பருவமழை காரணங்களால் சேதமடைந்து பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது மற்றும் இப்பழுதுகள் நாளடைவில் போக்குவரத்து காரணத்தினால் பெரிதாகி வருகிறது. இதனால் சாலைகள் மிகவும் பழுதடைகிறது. எனவே தார்சாலை மற்றும் சிமெண்ட் சாலைகளில் உள்ள பள்ளங்களை சீரமைக்கும் பணிக்கு முதன்முறையாக 17.11.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 10.00லட்சம்</u>**

1. M/s.V.BOOPATHI & CO, KARUR மதிப்பீட்டைவிட 15.66 %சதம் குறைவு
2. M/s.DRS Constructions, Karur மதிப்பீட்டைவிட 3.21 %சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.V.BOOPATHI & CO, KARUR ஒப்பந்ததாரரின்

ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.

2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **( இ1/7485/2025)**

**தீர்மான எண்.2815** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**32.**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் **–2**க்குட்பட்ட வார்டு எண்.**20** முதல் **27** மற்றும் **29** முதல் **35** பகுதிகளில் உள்ள சாலைகள் தற்போது புதிதாக பாதாள சாக்கடை குடிநீர் இணைப்புகள் மற்றும் பருவமழை காரணங்களால் சேதமடைந்து பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது மற்றும் இப்பழுதுகள் நாளடைவில் போக்குவரத்து காரணத்தினால் பெரிதாகி வருகிறது. இதனால் சாலைகள் மிகவும் பழுதடைகிறது. எனவே தார்சாலை மற்றும் சிமெண்ட் சாலைகளில் உள்ள பள்ளங்களை சீரமைக்கும் பணிக்கு முதன்முறையாக **17.11.2025**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 10.00லட்சம்</u>**

1. M/s.V.BOOPATHI & CO, KARUR மதிப்பீட்டைவிட **15.53** %சதம் குறைவு
2. M/s.DRS Constructions, Karur மதிப்பீட்டைவிட **0.23** %சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.V.BOOPATHI & CO, KARUR ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/7486/2025)**

**தீர்மான எண்.2816** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**33.**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் **–3**க்குட்பட்ட வார்டு எண்.**12** முதல் **19** மற்றும் **37** முதல் **42** பகுதிகளில் உள்ள சாலைகள் தற்போது புதிதாக பாதாள சாக்கடை குடிநீர் இணைப்புகள் மற்றும் பருவமழை காரணங்களால் சேதமடைந்து பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது மற்றும் இப்பழுதுகள் நாளடைவில் போக்குவரத்து காரணத்தினால் பெரிதாகி வருகிறது. இதனால் சாலைகள் மிகவும் பழுதடைகிறது. எனவே தார்சாலை மற்றும் சிமெண்ட் சாலைகளில் உள்ள பள்ளங்களை சீரமைக்கும் பணிக்கு முதன்முறையாக **17.11.2025**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 10.00லட்சம்</u>**

1. M/s.V.BOOPATHI & CO, KARUR மதிப்பீட்டைவிட **15.73** %சதம் குறைவு
2. M/s.DRS Constructions, Karur மதிப்பீட்டைவிட **0.23** %சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.V.BOOPATHI & CO, KARUR ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.

2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **( இ1/7487/2025)**

**தீர்மான எண்.2817** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**34.**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் **–4**க்குட்பட்ட வார்டு எண்.**36, 37, 43, 44, 45, 45, 47** மற்றும் **48** பகுதிகளில் உள்ள சாலைகள் தற்போது புதிதாக பாதாள சாக்கடை குடிநீர் இணைப்புகள் மற்றும் பருவமழை காரணங்களால் சேதமடைந்து பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது மற்றும் இப்பழுதுகள் நாளடைவில் போக்குவரத்து காரணத்தினால் பெரிதாகி வருகிறது. இதனால் சாலைகள் மிகவும் பழுதடைகிறது. எனவே தார்சாலை மற்றும் சிமெண்ட் சாலைகளில் உள்ள பள்ளங்களை சீரமைக்கும் பணிக்கு முதன்முறையாக **17.11.2025**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 10.00லட்சம்**</u>

1. M/s.V.BOOPATHI & CO, KARUR மதிப்பீட்டைவிட **15.66** %சதம் குறைவு
2. M/s.DRS Constructions, Karur மதிப்பீட்டைவிட **0.23** %சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.V.BOOPATHI & CO, KARUR ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/7488/2025)**

**தீர்மான எண்.2818** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**35.**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்**–4**க்குட்பட்ட வார்டு எண்.**44** தாந்தோணிமலை கல்யாண வெங்கட்ரமண பெருமாள் கோவில் தெற்கு பகுதி மற்றும் மேற்கு பகுதி வடிகால் பழுதடைந்து வடிகாலின் அகலம் குறுகலாக உள்ளதால் கழிவுநீர் தேங்கி உள்ளதை சாலைகளில் வெளியேறுவதால் பொதுமக்கள் மற்றும் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுவதால் மாநகராட்சி ஆணையாளர், செயற்பொறியாளர் மற்றும் 4வது மண்டலத் தலைவர் நேராய்வு செய்து புதிதாக வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க தெரிவித்தனர். மேலும் வரும் ஜனவரி **2026**ம் ஆண்டு கல்யாண வெங்கட்ரமண பெருமாள் கோவிலில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளதால் திரளான பக்தர்கள் கலந்து கொள்வதால் மேற்கண்ட வடிகால் பணியை அவசரம் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு முதன்முறையாக **14.11.2025**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 28.00லட்சம்**</u>

1. M/s KVNR INFRA, KARUR மதிப்பீட்டைவிட **0.01** %சதம் குறைவு
2. M/s.CVM & Co, Karur மதிப்பீட்டைவிட **1.01** %சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s KVNR INFRA, KARUR ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/736/2025)**

**தீர்மான எண்.2819** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**36.**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்– **1**க்குட்பட்ட பகுதிகளுக்கு வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்தில் இருந்து உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் வார்டு எண் **1–11** மற்றும் **28** வரை உள்ள வார்டு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.இதில் வாங்கல் தலைமை நீரேற்று நிலையம் முதல் வாங்கப்பாளையம் நீருந்து நிலையம் வரை உள்ள பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் குடிநீர் பகிர்மானக்குழாய்கள் சீரற்ற நீர் அழுத்தத்தின் மற்றும் இதர காரணங்களினால் குடிநீர் குழாய் பழுதடைந்து குடிநீர் வீணாவதை தவிர்க்கும் பொருட்டு உடனடியாக பழுது மற்றும் பராமரிப்பு பணிக்கு முதன்முறையாக **12.11.2025**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.40.00 லட்சம்</u>**

1. M/S.A S Power Solution, Trichy ,மதிப்பீட்டைவிட 0.05%சதம் குறைவு
2. M/s.ASV Constructions, Kaniyakumari மதிப்பீட்டைவிட 2.06% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்ற தீர்மானம் எண்.**2715**, நாள்.**06.10.2025**ம் தேதி ரூ.**40.00** இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.AS Power Solution, Trichy ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2/6265/2025)**

**தீர்மான எண்.2820** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**37.**கரூர் மாநகராட்சி மண்டலம்–**2** வார்டு எண். **20–27** மற்றும் வார்டு எண்.**28–35** பகுதிகளுக்கு நெரூர் காவிரி ஆற்றுப்படுகை மேலமாயனூர் ஆற்றுப்படுகை, தலைமை நீரேற்று நிலையம் அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கக் தொட்டிகளில் தண்ணீர் ஏற்றி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி பகுதிகளில் இருந்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் மெயின் லையன், டெலிவரி லையன் **200** mm HDPE /PVC 63mm, 90mm, 110mm, 160mm, 200mm, 100mm AC, 150mm AC, 200mm AC, 100mm DI, 200mm Di, 300mm CI, Pipe, அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி குடிநீர் விநியோகம் மெயின் லையன் மற்றும் டெலிவரி மெயின் லையனில் ஏற்படும் பழுதுகளை பணி உத்திரவு வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாத காலத்திற்கு உடனுக்குடன் சரி செய்து குடிநீர் விநியோகம் சீராக்க பராமரிப்பு பணிக்கு முதன்முறையாக **12.11.2025**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.40.00 லட்சம்</u>**

1. M/S.A S Power Solution, Trichy ,மதிப்பீட்டைவிட **0.05**%சதம் குறைவு

2. M/s.ASV Constructions, Kaniyakumari மதிப்பீட்டைவிட **3.13**%சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்ற தீர்மானம் எண்.**2716**, நாள்.**06.10.2025**ம் தேதி ரூ.**40.00** இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.A S Power Solution, Trichy ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2/6267/2025)**

**தீர்மான எண்.2821** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**38.**கரூர் மாநகராட்சி மண்டலம்–**3**க்குட்பட்ட பகுதிகளுக்கு தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து மூலக்காட்டானூர் நீருநது நிலையம் மூலமாக உயர்மட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் வார்டு எண்.**12–19** மற்றும் **38–42** வரை பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. கட்டளை தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து மூலக்காட்டானூர் நீருந்து நிலையம் வரை உள்ள பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் குடிநீர் பகிர்மானக்குழாய்கள் சீரற்ற நீர் அழுத்தத்தின் மற்றும் இதர காரணங்களினால் குடிநீர் குழாய் பழுதடைந்து குடிநீர் வீணாவதை தவிர்க்கும் பொருட்டு உடனயாக பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு சீரான குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளதால் கரூர் மாநகராட்சி மண்டலம் –**3**க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் பகிர்மானக்குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பணிக்கு முதன்முறையாக **12.11.2025**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.40.00 லட்சம்</u>**

1. M/S.A S Power Solution, Trichy ,மதிப்பீட்டைவிட **0.05**%சதம் குறைவு

2. M/s.ASV Constructions, Kaniyakumari மதிப்பீட்டைவிட **3.07**%சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்ற தீர்மானம் எண்.**2717**, நாள்.**06.10.2025**ம் தேதி ரூ.**40.00** இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.A S Power Solution, Trichy ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2/6266/2025)**

**தீர்மான எண்.2822** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**39.**கரூர் மாநகராட்சி மண்டலம் –**4** வார்டு எண்.**36, 37** மற்றும் **43–48** ஆகிய பகுதிகளுக்கு கட்டளை காவிரி ஆற்றுப்படுகை, தலைமை நீரேற்று நிலையம் அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் தண்ணீர் ஏற்றி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி பகுதிகளில் இருந்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் மெயின் லைன், டெலிவரி லைன் 63mm HDPE/PVC, 90mm HDPE/PVC, 110mm HDPE/PVC, 160mm HDPE/PVC, 200mm HDPE/PVC, 100mm AC, 150mm AC, 200mm AC, 100mm DI, 200mm DI, 400mm DI, Pipe அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி குடிநீர் விநியோகம் மெயின் லைன் மற்றும் டெலிவரி மெயின்

லைனில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பணிக்கு முதன்முறையாக 12.11.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.40.00 லட்சம்**

1. M/S.Malliga Engineering Contractor, Trichy, மதிப்பீட்டைவிட 0.02%சதம் குறைவு
2. M/s.Navaladiyan Electrical and Rewinding works, Trichy மதிப்பீட்டைவிட 3.00%சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்ற தீர்மானம் எண்.2718, நாள்.06.10.2025ம் தேதி ரூ.40.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.Malliga Engineering Contractor, Trichy ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2/6264/2025)**

**தீர்மான எண்.2823** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**40.**கரூர் மாநகராட்சி மண்டலம் –3 வார்டு எண்.41 ஜீவா நகர் பகுதியில் வடிகால் கரூர் மாநகராட்சி மண்டலம் – 3 வார்டு எண்.41 ஜீவா நகர் பகுதியில் வடிகால் வசதி இல்லாததால் கழிவுநீர் மற்றும் மழைநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலையில் உள்ளதால் அப்பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணிக்கு முதன்முறையாக 12.11.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 லட்சம்**

1. K.Ramesh, Karur, மதிப்பீட்டைவிட 0.01 %சதம் குறைவு
2. T.Sundarraj, Karur மதிப்பீட்டைவிட 3.02%சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்ற தீர்மானம் எண்.2737, நாள்.06.10.2025ம் தேதி ரூ.10.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள K.Ramesh, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/6354/2025)**

**தீர்மான எண்.2824** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**41.**கரூர் மாநகராட்சி மண்டலம் –3 வார்டு எண்.12 முதல் 19 மற்றும் 38 முதல் 42 வரை 13 வார்டுகளிலுள்ள 280 ஆழ்துளை கிணறுகளில் மின்மோட்டார் மூலம் குடிநீர் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆழ்துளை கிணறுகளின் மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் கேபிள் பழுதுகள், குழாய்கள் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யும் பணிக்கு முதன்முறையாக 12.11.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.38.00 லட்சம்**

1. M/S.Malliga Engineering Contractor, Trichy, மதிப்பீட்டைவிட 0.01%சதம் குறைவு
2. M/s.Navaladiyan Electrical and Rewinding works, Trichy மதிப்பீட்டைவிட 3.01%சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்ற தீர்மானம் எண்.2720, நாள்.06.10.2025ம் தேதி ரூ.38.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.Malliga Engineering Contractor, Trichy ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2 /2025)**

**தீர்மான எண்.2825** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**42.**கரூர் மாநகராட்சி மண்டலம் –2 வார்டு எண்.31 திருப்பதி லே அவுட் 5வது தெருவில் உள்ள மழை நீர் வடிகால் முற்றிலும் சேதமடைந்துள்ளதால் மழை காலங்களில் தண்ணீர் தேங்குகிறது. அவ்வாறு மழை நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார கேடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே புதிதாக மழை நீர் வடிகால் அமைக்க அவசியமாகிறது. மேலும் அவ்வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் மழை நீர் வடிகால் அமைத்த பிறகு தார்சாலை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதின்பேரில் மேற்கண்ட தெருவில் மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு முதன்முறையாக 12.11.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00 லட்சம்</u>**

1. M/S.Thiru.K VENKATACHALAM, மதிப்பீட்டைவிட 0.02%சதம் குறைவு
2. Thiru.NARAYANA ROAD SAFETY மதிப்பீட்டைவிட 0.82%சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்ற தீர்மானம் எண்.2614, நாள்.06.08.2025ம் தேதி ரூ.15.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.Thiru.K VENKATACHALAM ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/287/2025)**

**தீர்மான எண்.2826** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**43.**கரூர் மாவட்டம் கரூர் வட்டம் எல்.என்.எஸ். கிராமம் புல எண்.287 மற்றும் 372 ராஜ வாய்க்காலின் கிளை வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தரக்கோரி திரு.A.சுப்பிரமணி என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.(M.D) No.1414 of 2020, தீர்ப்பு வரப்பெற்ற நாள்.12.06.2025ல் அனைத்து ஆக்கிரமிப்புகளும் அமராவதி வடிநிலக் கோட்டம், தாராபுரம் அவர்களின் மூலம் 4 மாத காலத்திற்குள் அகற்றப்பட வேண்டும் என்று உத்திரவிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்படி ஆக்கிரமிப்புகள் வருவாய் கோட்டாட்சியர், கரூர் வட்டாட்சியர், கரூர் வட்டம், உதவி செயற்பொறியாளர், கரூர் மாநகராட்சி, கரூர் நகரம், உதவி பொறியாளர், நீர்வளத்துறை, அமராவதி வடிநிலப் பிரிவு எண்.1 கரூர், காவல் உதவி ஆய்வாளர், காவல் நிலையம் கரூர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர், எல்.என்.எஸ். கிராமம் ஆகியோருடன் இணைந்து கூட்டாய்வின்போது மேற்படி அரளிக்கொத்து கிளை வாய்க்கால் புல எண்.287 பகுதி மற்றும் 372 பகுதி

நிலத்தில் கரூர் மாநகராட்சி நிர்வாகம் மூலம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இத்தார்சாலையானது அரளிக்கொத்து கிளை வாய்க்காலின் பாசன நீர்வழிப்பாதையை முழுவதுமாக மூடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டதால் கரூர் மாநகராட்சி நிர்வாக மூலம் மேற்படி அரளிக்கொத்து கிளை வாய்க்கால் புல எண்.287ல் பகுதி மற்றும் 372ல் பகுதி நிலங்களில் உள்ள தார்சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றி வாய்க்காலில் பாசன காலங்களில் பாசன நீர் செல்ல ஏதுவாகவும், மழை காலங்களில் மழை வெள்ள நீர் சென்று வடிய ஏதுவாகவும் மாற்று ஏற்பாடான வாய்க்கால் பாலம் (RCC slab culvert) அமைப்பதற்கு நீர்வளத்துறை அமராவதி வடிநிலக் உபகோட்டம், தாராபுரம் அவர்களிடம் தடையின்மை சான்று பெற்று பணிகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, அரளிக்கொத்து கிளை வாய்க்கால் புல எண்.287ல் பகுதி மற்றும் 372ல் பகுதி நிலங்களில் உள்ள தார்சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றி வாய்க்காலில் பாசன காலங்களில் பாசன நீர் செல்ல ஏதுவாகவும், மழை காலங்களில் மழை வெள்ள நீர் சென்று வடிய ஏதுவாகவும் மாற்று ஏற்பாடான வாய்க்கால் பாலம் (RCC slab culvert) அமைப்பதற்கு ரூ.32.80 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடுகள் தயார் செய்து 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2025–2026ம் ஆண்டின் கீழ் நிர்வாக அனுமதி பெறுவதற்காக கருத்துருக்கள் தயார் செய்யப்பட்டு 12.09.2025ம் தேதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டது. மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் அவர்களால் மேற்படி பணியினை விரைந்து முடிக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

அதன்படி மண்டலம்–2 வார்டு எண்.26 பொதுப்பணித்துறைக்கு சொந்தமான அரளிக்கொத்து மூடியுடன் கூடிய வாய்க்கால் பாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.32.80 இலட்சத்தினை அவசர அவசியம் கருதி பொதுநிதியின்கீழ் மேற்கொள்வதற்கு முதன்முறையாக 12.11.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.32.80 லட்சம்</u>**

1. M/S.R K INFRA CONTRACTOR, KARUR, மதிப்பீட்டைவிட 0.01%சதம் குறைவு
2. Thiru.Bharathi Construction, Karur மதிப்பீட்டைவிட 4.66%சதம் அதிகம்

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.RK INFRA CONTRACTOR, KARUR ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
4. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், திட்ட நிதியின்கீழ் மேற்படி தொகை வரப்பெற்றவுடன் வருவாய் நிதிக்கு ஈடு செய்து கொள்வதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/4813/2025)**

**தீர்மான எண்.2827** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**44.** கரூர் மாநகராட்சி, இனாம் கரூர், கிராம புல எண்.135 முதல் 138 வரை 140, 141, 146, 151 முதல் 155 வரை 160ல் உள்ள 98.43 ஏக்கர் பரப்பளவிலுள்ள மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடு இடம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். WP(MD) No.2895/2011 மற்றும் Con.P(MD)No.1487/2019ன் தீர்ப்பு நாள்.26.06.2023ன் படி மாநகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்புகளை பெற்றுக்கொண்ட நபர்களில் பலர் மாநகராட்சி மூலம் வழங்கப்பட்ட அறிவிப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்கள். W.P(MD) No.30725 to 30759, 30791, 30792, 30988 to 31003 & 31060 to 31075/2025 மற்றும் பல வழக்குகள்

தொடர்ந்துள்ளார்கள். ஏற்கனவே தொடர்ந்துள்ள வழக்குகள் மற்றும் மேற்கொண்டு தொடரப்படும் வழக்குகளின் முக்கியத்துவத்தினை கருதி இவ்வழக்கில் மாநகராட்சி சார்பாக ஆஜராக 24திரு.இரா.பாஸ்கரன், அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் (Addl. Advocate General) அவர்களை நியமனம் செய்யவும் அதற்கான செலவீனங்களுக்கும் மற்றும் அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஆஜராகும் நிலையில் அவருக்கு வழக்கில் துணைபுரியும்பொருட்டு ஆஜராகும் திரு.கே.பாலசுப்பிரமணியன், மாமன்ற வழக்கறிஞர் மற்றும் வழக்கறிஞர்களின் செலவீனங்களுக்கும், மாநகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மாமன்றம் அனுமதிக்கலாம். **(8110/2015/எப்1)**

**தீர்மான எண்.2828** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**45.**கரூர் மாநகராட்சி மண்டலம் **–1** க்குட்பட்ட வார்டு எண்.**11** ஐந்து ரோடு முதல் ரயில்வே குவார்ட்டஸ் உள்ள பகுதிகளில் புதைவடிகால் **900** அஅ ஆர்.சி.சி குழாய் உடைந்துள்ளதால் கழிவு நீர் வெளியே சென்று சாலையில் வழிந்தோடி சுகாதார கேடு ஏற்படுகிறது. எனவே மேற்படி பகுதியில் பொதுமக்களின் நலன் கருதி **900** அஅ ஆர்.சி.சி குழாய் புதிதாக அமைக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே ஐந்து ரோடு முதல் ரயில்வே குவார்ட்டஸ் உள்ள பகுதிகளில் சேதமடைந்த **900** அஅ ஆர்.சி.சி குழாயை புதிதாக மாற்றி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. **19.00** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

**1.**மாமன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.**19.00** இலட்சத்தை மாநகராட்சி வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ5/7389/ 2025)**

**தீர்மான எண்.2829** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**46.**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் பகுதி, கரூர் பகுதி மற்றும் இதர பகுதிகளில் உள்ள மனித ஆய்வுக்குழிகளில் மூடப்பட்டுள்ள மேன்ஹோல் மூடிகள் பழுதடைந்து பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படுத்தும் வகையில் உள்ளது. எனவே கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மனித ஆய்வுக்குழிகளில் பொருத்தப்பட்டுள்ள மேன்ஹோல்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.**7.00** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**1.**மாமன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்படி பணிக்காகும் கூடுதல் செலவினத் தொகை ரூ.**7.00** இலட்சத்தை மாநகராட்சி புதை வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ5/7392/ 2025)**

**தீர்மான எண்.2830** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**47.**மாமன்ற அவசர கூட்டத் தீர்மானம் எண்.**2156** நாள்.**06.01.2025**ல் கரூர் மாநகராட்சி மண்டலம்**–1** வார்டு எண்.**5** எம்.கே.நகர் பகுதியில் மழைக்காலங்களில் மழைநீர் வெளியேறுவதற்கு தமிழ்நாடு கதர் கிராமம் தொழில் வாரிய மையம் உள்ள கிழக்கு பகுதியில் புல எண்.**143–2**சி–ல் சுமார் **80** மீட்டர் நீளத்தில் **1.50** மீட்டர் அகலத்தில் மழைநீர் வடிகால் அமைப்பதற்கு ஏதுவாக இவ்விடத்தினை கரூர் மாநகராட்சிக்கு அனுமதி வழங்ககோரி தமிழ்நாடு கதர் கிராமம் தொழில் வாரியத்திடம் அனுமதி பெறுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து இவ்வலுவலக கடிதம் நாள்.**24.03.2025** மற்றும் **28.04.2025**ல் மேற்படி மண்டலம் **–1** வார்டு எண்.**5** எம்.கே.நகர் பகுதியில் மழைக்காலங்களில் மழைநீர் வெளியேறுவதற்கு தமிழ்நாடு கதர் கிராமம் தொழில் வாரிய மையம் உள்ள கிழக்கு பகுதியில் புல எண்.**143–2**சி–ல் சுமார் **80** மீட்டர் நீளத்தில் **1.50** மீட்டர் அகலத்தில் மழைநீர் வடிகால் அமைப்பதற்கு அனுமதி வழங்ககோரி உதவி இயக்குநர், கதர் கிராமம் தொழில்கள், திண்டுக்கல் அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதன்படி உதவி இயக்குநர், கதர் கிராமம் தொழில்கள், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.348/கே/2020 நாள்.12.06.2025ல் மேற்படி புல எண்.143/2சி–ல் 0.81.00– ஹெக்டேர்ஸ் இடம் வாரியத்தின் பட்டா நிலம் என்பதால் இலவசமாக வழங்கிட வழிவகை இல்லை. தங்களால் கோரப்படும் நிலத்தின் தற்போதைய அரசு வழிகாட்டி மதிப்பு அல்லது கரூர் மாவட்ட வருவாய் அலுவலரால் நிர்ணயம் செய்யப்படும் சந்தை மதிப்பு இதில் எது அதிகமோ அதன் அடிப்படையில் நில மதிப்பினை கணக்கீடு செய்து, அத்தொகைக்கு நிலத்தினை கொள்முதல் செய்து கொள்ள தாங்கள் சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் அதன் முழு விபரத்தினையும் வாரியகுழு கூட்டத்தின் முன் வைத்து ஒப்புதல் பெற்ற பின்னர், அரசுக்கு அறிக்கை அனுப்பி அரசாணை பெற்று தங்களுக்கு விற்பனை செய்யப்படும் என்ற விபரம் வாரியத்திலிருந்து பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –1 வார்டு எண்.5 எம்.கே.நகர் பகுதிகளில் மழை காலங்களில் மழைநீர் வெளியேற வாரியத் தொழில் மைய உள்ள கிழக்கு பகுதிகளில் புல எண்.143–2சி–ல் சுமார் 80 மீட்டர் நீளத்தில் 1.50 மீ அகலத்தில் மழைநீர் வடிகால் அமைப்பதற்கு இந்த இடத்தினை தவிர வேறு பாதையை அல்லது இடத்தினை பயன்படுத்த வழிவகை இல்லாத காரணத்தினால் மேற்படி பகுதியில் மழைநீர் வடிகால் அமைப்பதற்கு நிலத்தினை கொள்முதல் செய்துகொள்வதற்கு தற்போதைய அரசு வழிகாட்டு மதிப்பு அல்லது நிர்ணயம் செய்யப்படும் சந்தை மதிப்பு இதில் எது அதிகமோ அதன் அடிப்படையில் நிலத்தினை கொள்முதல் செய்து கொள்வதற்கு அரசு அனுமதி பெற்று செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1.மாமன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/5944/ 2025)**

**தீர்மான எண்.2831** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**48.**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட சணப்பிரட்டி பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக தமிழ்நகர் மற்றும் எழில்நகர் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள 192 அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் கரூர் மாநகராட்சி ஆணையர், மாநகராட்சி துணை மேயர், மண்டலம்–3 தலைவர், 15வது வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் நேரடி தள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், மேற்படி அடுக்குமாடி குடியிருப்பில் கட்டபபட்டு இருக்கும் குடியிருப்புகளுக்கு போதுமான கொள்ளளவு கொண்ட நச்சுத்தொட்டி (Septic tank) கட்டப்படவில்லை. மேலும் மழைநீர் வெளியேறுவதற்கான வழிவகைகளும் செய்யப்படவில்லை. வீட்டின் கழிப்பிடம், குழியலறை மற்றும் சயைலறையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் (Black Water and grey water) தனித்தனியே அமைக்கப்படாமல் இரண்டும் ஒரே குழாயில் செல்ல வழிவகை செய்யப்பட்டு போதுமான கொள்ளளவு கொண்ட நச்சுத்தொட்டியில் திரவக்கழிவு விடப்பட்டு, உரிய மேலாண்மை செய்யப்படாமல் அங்கு வசிக்கும் பொதுமக்களுக்கு மிகவும் சுகாதாரக்கேடு ஏற்படும் நிலையில் உள்ளதை கண்டறிப்பட்டது.

மேற்படி 192 அடுக்குமாடி குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரினை அப்புறப்படுத்துவதற்கு கழிவுநீர் நீருந்து நிலையம் மற்றும் குழாய்கள் அமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு பொதுப்பணித் துறையில் விலைவிகித அடிப்படையின்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.97.00 இலட்சத்தினை நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், நாமக்கல் அவர்களுக்கு கடிதம் அனுப்பட்டுயிருந்த நிலையில் மேற்படி பணிக்கு ஆறாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுநீர் உறிஞ்சி வாகனம் தவிர்த்து, கழிவுநீர் நீருந்து நிலையம் மற்றும் குழாய்கள் அமைக்கும் பணிக்கு 47.00 லட்சம் வழங்குவதாக தெரிவிக்கப்பட்டு யூனியன் பாங் ஆப் இந்தியா வங்கியின் காசோலை எண் 049815 நாள் 25.11.2025 மூலம் ரூ.47.00 லட்சம் வரப்பெற்றுள்ளது, எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மாமான்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ5/110/2024)**

**தீர்மான எண்.2832** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**49.**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட கொளந்தாகவுண்டனூர் பகுதியில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால், மாண்புமிகு பாரத பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ், உள்ள குடியிருப்புகள் வசிப்பதற்கு ஏற்புடையதாக இல்லாத சிதிலமடைந்த நிலையில் இருந்து **112** பழைய அடுக்குமாடி குடியிருப்புகளை இடித்து அகற்றிவிட்டு மீண்டும் அதே இடத்தில் **125** புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசாணை **(4டி)** எண்.**30**, நாள்.**17.05.2023**ன் நிதி பங்கீட்டின்படி கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரினை மாநகராட்சி மூலம் அமைக்கப்பட்டு பாரமரிக்கப்பட்டுவரும் பாதாளச்சாக்கடை திட்டத்தின் மூலம் வெளியேற்ற மாநகராட்சி அனுமதி வழங்கவும் அதற்க்குறிய மதிப்பீட்டு தொகையும் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி **125** அடுக்குமாடி குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரினை அப்புறப்படுத்துவதற்கு கழிவுநீர் நீரூந்து நிலையம் மற்றும் குழாய்கள் அமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு பொதுப்பணித் துறையில் விலைவிகித அடிப்படையின்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**96.00** இலட்சத்தினை நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், நாமக்கல் அவர்களுக்கு கடிதம் அனுப்பட்டுயிருந்த நிலையில் மேற்படி பணிக்கு யூனியன் பாங் ஆப் இந்தியா வங்கியின் காசோலை எண் **049814** நாள் **25.11.2025** மூலம் ரூ.**96.00** லட்சம் வரப்பெற்றுள்ளது, எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்ள மாமான்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ5/110/2024)**

**தீர்மான எண்.2833** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**50.** மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்களால் **14.08.2025** அன்று நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் தூய்மைப் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு காலை உணவு அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால் இலவசமாக வழங்கப்படும். இத்திட்டம் முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு, படிப்படியாக மற்ற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**29143/2025/எச்3** நாள்.**22.11.2025**ல் அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு தினந்தோறும் ஒரு வேளை உணவு வழங்குவதற்கு நிர்வாக அனுமதி வழங்கி அரசாணை மற்றும் வழிமுறைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் அட்டவணை **7**ல் இரண்டாம் நிலை மாநகராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு பணியாற்றும் நேரத்திற்கு ஏற்றவாறு நாள்தோறும் ஒரு வேளை உணவு வழங்குவதற்கு ஒரு நபருக்கான ஒரு வேளை/ ஒரு நாள் காலை உணவின் விலை ரூ.**39/** உணவு விநியோகத்திற்க்கு மாதம் ஒன்றிற்கு ரூ.**80,000/–** எனவும் ஒரு வருடத்திற்கு ரூ.**9,60,000/–** எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் ஒருவேளை உணவு தயாரித்தல் மற்றும் உணவு விநியோக செலவினம் என ஒட்டுமொத்தமாக ஏற்படும் முதலாமாண்டு செலவினத்துடன் **5** சதவீதம் ஏற்றம் செய்து இரண்டாம் ஆண்டிலும், இரண்டாம் ஆண்டின் ஒட்டுமொத்த செலவினத்துடன் **5** சதவீதம் ஏற்றம் செய்து மூன்றாம் ஆண்டிலும் செலவினம் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சிகளில் தூய்மை பணியாளர்களுக்கு ஒரு வேளை உணவு வழங்குவதற்கான செலவினத்தை உரிய வரிகளுடன் மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.

அதன்படி கரூர் மாநகராட்சியில் **1061** தூய்மை பணியாளர்களுக்கு ஒரு வருடத்திற்கு உணவு வழங்க (1061 x 39.00 x 365) ரூ.**1,51,10,335/** மற்றும் வாகனங்களின் மூலம் உணவு வழங்கிட மாதம் ஒன்றுக்கு ரூ.**80,000/–** என ஆண்டிற்கு ரூ.**9,60,000/**யும் ஆக உணவு தயாரித்தலுக்கு முதலாம் ஆண்டிற்கு ரூ.**1.69** கோடியும் சரக்கு மற்றும் சேவை வரியுடன், மூன்று ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ.**5.32** கோடி அனுமதி வழங்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலகத்தின் மூலமாக **21.11.2025** தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு Online E-Tenderல் **4** ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1) M/s Kothari Industrial Corporation limited

114, Mahatma Gandhi road, Chennai-600034
2) M/s Peoples kitchen
No.4, 1st street Kothari layout, Ramanathapuram,
Coimbatore – 641005
3) M/s Saroja Catering and Hostels
1-10-243 Ashoknagar
Hyderabad-500020
4) M/s AI Enterprises, No.80 A,
Sudha illam, Saraswathi nagar,
Kovaipudur, Coimbatore-641042

மேற்கண்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளை கரூர் மாநகராட்சின் கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதிகளின் அடிப்படையில் வரிசை எண்.**1**, **2**, **3** தொழில்நுட்ப ரீதியாக தகுதி உடையது. மேலும் வரிசை எண் **4** ல் M/s AI Enterprises, Coimbatore, தொழில்நுட்ப ரீதியாக தகுதி பெறப்படவில்லை.

எனவே தொழில்நுட்ப ரீதியாக தகுதி பெற்றுயுள்ள மூன்று ஒப்பந்தபுள்ளிகளை **26.11.2025** ம் தேதியன்று Price Bid திறக்கப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1) M/s Kothari Industrial Corporation limited, Chennai - மதிப்பீட்டைவிட **15.62** சதவீதம் குறைவு
2) M/s Peoples kitchen,Coimbatore - மதிப்பீட்டைவிட **0.55** சதவீதம் குறைவு
3) M/s Saroja Catering and Hostels.Hyderabad- மதிப்பீட்டைவிட **3.67** சதவீதம் அதிகம்

**அலுவலக குறிப்பு.**

**1.**அரசாணை எண்.**4**ப எண்.**56**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.**21.11.2025** மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**2.**மேற்கண்ட பணிக்கான வரப்பெற்ற **3** ஒப்பந்தபுள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள M/s Kothari Industrial Corporation limited, Chennai அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்க்கலாம் மற்றும் ஒப்பந்த விதிகளின் படி **5** சதவீதம் கூடுதல் வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது LOAவழங்க அனுமதிக்கலாம்.

**3.**மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்க்குறிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**4.**மேற்கண்ட பணிக்கான செலவீன தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(7130/2025/எச்1)**

**தீர்மான எண்.2834** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**51.**கரூர் மாநகராட்சி மண்டலம்**–1**, வார்டு எண்.**1** என்.எஸ்.பி நகரில் உள்ள சமுதாயக்கூடத்திற்கு புதிதாக சமையல் அறை அமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தனர். அதன்படி மேற்கண்ட பகுதியில் உள்ள சமுதாயக்கூடத்தை நேராய்வு செய்ததில் இப்பணி மேற்கொள்வது மிகவும் அவசியமாகிறது. எனவே, என்.எஸ்.பி நகரில் உள்ள சமுதாயக்கூடத்திற்கு புதிதாக சமையல் அறை கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**8.50/–** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**1)** மாமன்றம் அனுமதிக்கலாம்

**2)** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்

**3)** மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.**8.50/–** இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/6979/2025)**

**தீர்மான எண்.2835** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

52.கரூர் மாநகராட்சி மண்டலம்–1, வார்டு எண்.1 திருவள்ளுவர் நகர் 7வது தெருவில் உள்ள சாலை மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, மேற்படி திருவள்ளுவர் நகர் 7வது தெருவில் உள்ள சாலையை புதுப்பிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.80/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3) மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.7.80/– இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/6979/2025)**

**தீர்மான எண்.2836** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

53.கரூர் மாநகராட்சி மண்டலம்–1, வார்டு எண்.1 சின்னகோதூர் வடக்குத் தெருவில் உள்ள பொதுமக்களுக்கு தற்போது குடிநீர் வசதி இல்லை. அதனால் மேற்கண்ட பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றில் புதியதாக மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைப்பது மிகவும் அவசியமாகிறது. எனவே, மேற்படி சின்னகோதூர் வடக்குத் தெரு பகுதியில் புதியதாக மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3) மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.2.00/– இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/6979/2025)**

**தீர்மான எண்.2837** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

54.கரூர் மாநகராட்சி மண்டலம்–1, வார்டு எண்.1 என்.எஸ்.பி நகரில் உள்ள மயானத்தின் சுற்றுச்சுவர் தற்போது மிகவும் உயரம் குறைவாக உள்ளதால் அப்பகுதி பொதுமக்கள் அந்த சுற்றுச்சுவரை உயர்த்தி தர கோரிக்கை வைத்தனர். எனவே, என்.எஸ்.பி நகரில் உள்ள மயானத்தின் சுற்றுச்சுவரை உயர்த்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.50/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3) மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.4.50/– இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ2/6979/2025)**

**தீர்மான எண்.2838** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

55.நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்.டிஎம்ஏ/288/2025/SBM2 நாள்.24.11.2025ல் தூய்மை பாரத இயக்கம் (Urban 2.0) – 10வது

மாநில உயர் அதிகார குழு கூட்ட நடவடிக்கையில் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் சமுதாயக் கழிப்பிடம், பொதுக்கழிப்பிடத்தினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் புதியதாக சமுதாயக் கழிப்பிடம், பொதுக்கழிப்பிடம் கட்டும் பணிக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

❖ பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் கழிப்பிடத்தின் விவரம்

| வ. எண் | கழிப்பிடத்தின் விபரம் | எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | மத்திய அரசு நிதி (ரூ.இலட்சத்தில்) | மாநில அரசு நிதி (ரூ.இலட்சத்தில்) | மாநகராட்சி பங்களிப்பு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | பொது கழிப்பிடம் | 4 | 24.00 | 7.90 | 5.30 | 10.80 |

❖ புதிதாக மேற்கொள்ளப்படும் கழிப்பிடத்தின் விவரம்

| வ. எண் | கழிப்பிடத்தின் விபரம் | எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | மத்திய அரசு நிதி (ரூ.இலட்சத்தில்) | மாநில அரசு நிதி (ரூ.இலட்சத்தில்) | மாநகராட்சி பங்களிப்பு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | சமுதாய கழிப்பிடம் | 1 | 15.00 | 16.5 | 11.00 | 22.50 |
| 2 | பொது கழிப்பிடம் | 1 | 35.00 | | | |

மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிகளின் மதிப்பீட்டிற்கு கீழ்கண்ட இடங்களில் பணிகள் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

❖ பராமரிப்பு பணிகள் செய்யப்படும் பொதுகழிப்பிடத்தின் விபரம்

| வ.எண் | வார்டு எண் | தெரு பெயர் | பழுதடைந்த இருக்கைகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 1 | என்.எஸ்.பி நகர் பெரியகோதுார் | 6 | 4.50 |
| 2 | 3 | வி.வி.ஜீ நகர் | 6 | 4.50 |
| 3 | 9 | புதுக்குளத்துப்பாளையம் | 10 | 7.50 |
| 4 | 10 | இந்திரா நகர் | 10 | 7.50 |
| | | மொத்தம் | | **24.00** |

❖ புதிய பொதுகழிப்பிடம் கட்டப்படும் விபரம்

| வ.எண் | வார்டு எண் | தெரு பெயர் | தேவைப்படும் இருக்கைகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 48 | மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் | 14 | 35.00 |

❖ புதிய சமுதாய கழிப்பிடம் கட்டும் விபரம்

| வ.எண் | வார்டு எண் | தெரு பெயர் | தேவைப்படும் இருக்கைகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 33 | படிகட்டுத்துறை சிட்டி கேப் சந்துப் பகுதியில் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி | 10 | 15.00 |

அலுவலக குறிப்பு:

**1.**மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2.மேற்படி அனுமதி வழங்கப்பட்ட பணிகளுக்கு மாநகராட்சி பங்களிப்புத் தொகை ரூ.33.30 இலட்சத்தினை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்
3.மேற்கண்ட பணிகளின் அவசர அவசியம் கருதி, மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம். (இ1/1431/2025)

**தீர்மான எண்.2839** பதிவு செய்யப்பட்டது

56.நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.6792/2025/மா.ந.அ3, நாள்.24.04.2025ல் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பழுதடைந்த மாணவர் தங்கும் விடுதி அமைந்திருந்த இடத்தில் ரூ.169.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய நீச்சல் குளம் கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி நீச்சல் குளத்திற்கு பயன்படுத்தப்படும் பொருட்களின் தரம், கான்கீரிட்டின் உறுதித்தன்மை மற்றும் மூன்றாம் நபர் ஆய்வறிக்கை தயார் செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, சேலம் அவர்களிடம் 12.11.2025ம் தேதி கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதன்படி, மேற்படி நீச்சல் குளத்திற்கு பயன்படுத்தப்படும் பொருட்களின் தரம், கான்கீரிட்டின் உறுதித்தன்மை மற்றும் மூன்றாம் நபர் ஆய்வறிக்கை தயார் செய்து அறிக்கை சமர்பிக்க முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, சேலம் அவர்களின் கடிதம் எண்.RI/GCE/Slm/Civil/2025 நாள்.20.11.2025ல் ரூ.1,06,200/–ஐ செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எனவே, மேற்படி நீச்சல் குளத்திற்கு பயன்படுத்தப்படும் பொருட்களின் தரம், கான்கீரிட்டின் உறுதித்தன்மை மற்றும் மூன்றாம் நபர் ஆய்வறிக்கை பெறுவதற்கு முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, சேலம் அவர்களுக்கு ரூ.1,06,200/–ஐ செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/5708/2024)

**தீர்மான எண்.2840** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

57.கரூர் மாநகராட்சி மண்டலம்–1, 2, 3 மற்றும் 4க்குட்பட்ட 48 வார்டு பகுதிகளில் பொதுமக்கள் பங்கேற்புடன் வார்டு அளவிலான சபா கூட்டங்கள் நடத்துமாறு அரசாணை (நிலை) எண்.324 நாள்.17.10.2025 அன்று உத்திரவிடப்பட்டது. அதன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் 27.10.2025 முதல் 29.10.2025க்குள் அனைத்து வார்டுகளிலும் சிறப்பு கூட்டம் நடத்தி முடிக்குமாறு சுற்றறிக்கை 18.10.2025ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கரூர் மாநகராட்சி மண்டலம்–1க்குட்பட்ட பகுதிகளில் சபா கூட்டம் நடத்த சாமியான பந்தல், மேசை, நாற்காலிகள், மின்விளக்கு, தண்ணீர் மற்றும் ஒலிபெருக்கி தேவைப்படுகிறது. இப்பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.90/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி சட்டம் விதி 57(7) பிரிவின் கீழ் மேற்கொண்டதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/6803/2025)

**தீர்மான எண்.2841** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

58.சட்டமன்ற தேர்தல் 2026ல் நடைபெற இருப்பதால் கரூர் மாநகராட்சி மண்டலம் –1க்குட்பட்ட வார்டு எண்.1,2,3,4,5,6,7,8,9,10,11 மற்றும் 28 வார்டு பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகளில் குடிநீர், மின்வசதிகள் செய்தல் , சாமியானா பந்தல்அமைத்தல், சி.சி.டிவி கேமராக்கல் அமைத்தல், கதவுகள், ஜன்னல்களை சரி செய்தல், பெயிண்டிங் பணிகள் செய்தல், ரேம்ப (சுயஅுயீ) வசதிகள் செய்தல்

போன்ற இதர பணிகளை முன்கூட்டியே செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தொகை ரூ.10.00 இலட்சம் மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/7380/2025)**

**தீர்மான எண்.2842** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

59. மண்டலம் –2ல் உள்ள மேல மாயனூர், பாலம்மாள்புரம் மண்டலம் –3ல் உள்ள மூலக்காட்டானூர், மண்டலம் –4ல் உள்ள பொன்நகர் ஆகிய குடிநீர் வந்து நிலையத்தில் உள்ள குளோரினேசன் இயந்திரம் பழுதான நிலையில் உள்ளது. இதனால் மாநகராட்சி பகுதிகளில் குளோரின் கலந்து குடிநீர் வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே கரூர் மாநகராட்சியில் மண்டலம் 2,3,4ல் உள்ள குளோரினேசன் இயந்திரத்தை சரி செய்யும் பணிகளை உடன் மேற்கொள்ள தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7)ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு விலைப்புள்ளி அளித்துள்ள M/s. I Tech Systems அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.16,90,063/—ஐ மாநகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ சதவிகிதத்தில் |
|---|---|---|
| 1 | **M/s.I Tech Systems, Erode** | **0.04 % Less** |
| 2 | **M/s.Sridhar Chemicals, Erode** | **2.28% Less** |
| 3 | **M/s.Quality Engninering Chennai** | **5.13 % Less** |

அலுவலக குறிப்பு

1.மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7)ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.I Tech Systems, Erode அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கி பணியினை மேற்கொண்டதையும் மாமன்றம் பதிவு செய்யலாம். இ2/4361/2025

**தீர்மான எண்.2843** பதிவு செய்யப்பட்டது

60.கரூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தாந்தோணி கிராமத்தில் 1)எஸ்.சுதா மற்றும் 2)பி.மாலா ஆகியோருக்கு சொந்தமான புல எண்.847/1C, 847/2B2, 847/5A2–ல் 1.9335 ஏக்கர் இடத்திற்கு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களால் மனைப்பிரிவிலுள்ள சாலை மற்றும் பொது உபயோகம் இடத்தினை நன்கொடை பத்திர பதிவு ஆவண எண்.2823/2025, நாள்.17.04.2025ன் வாயிலாக பெற்றுக்கொண்டு கடித ந.க.எண்.51JIKP9U/2025/TCP நாள்.25.04.2025ல் மனைப்பிரிவிற்கு ம.வ/மா.ந.ஊ.அ(க.மா) எண்.68/2025 (இணையதள ஒப்புதல்) என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வரப்பெற்றுள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்படி மனைப்பிரிவிலுள்ள சாலைகள், மழைநீர் வடிகால் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் முறையாக அமைக்கப்பட்டுள்ளது என்கிற மாநகராட்சி செயற்பொறியாளர் அவர்களின் குறிப்பு மற்றும் நிபந்தனைகளை ஏற்று சாலை மற்றும் பொது உபயோக இடத்தினை பத்திரபதிவு செய்யப்பட்டுள்ளதற்கு பின்னேற்பு அனுமதி வழங்குவதுடன் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கலாம்.

**(5063/2025/எப்1)**

**தீர்மான எண்.2844** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**61.**கரூர் மாநகராட்சி மண்டலம்–**4**, வார்டு எண்.**43**க்குட்பட்ட பகுதிகளான வாஞ்சிநாதன் நகர், குறிஞ்சி நகர் மற்றும் வார்டு எண்.**46**க்குட்பட்ட பகுதிகளான பகவதியம்மன் நகர், வையாபுரி நகர் குறுக்கு சாலைகளில், சிமெண்ட் கான்கிரீட் சாலை பழுதடைந்து உள்ளதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதிகளிலுள்ள குறுக்கு சாலைகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலை புதுப்பிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**5.50/–** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் அனுமதிக்கலாம்
3) மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **( இ1/2025)**

**தீர்மான எண்.2845** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**62.** கரூர் மாநகராட்சி திருமாநிலையூரில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தில் உணவகங்கள் மற்றும் கழிப்பிட பயன்பாட்டிற்காக தண்ணீர் அதிக அளவில் தேவைப்படுவதால் புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்துதல் மற்றும் ஏலம் விடப்பட்டுள்ள கடைக்காரர்களுக்கான குடிநீர் பயன்பாட்டிற்காக சின்டெக்ஸ் தொட்டிகள் மற்றும் குடிநீர் குழாய்கள் அமைத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**15.00** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**1.**மாமன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**3.**மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.**15.00** இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ2/7390/2025)**

**தீர்மான எண்.2846** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**63.**கரூர் மாநகராட்சி மண்டலம்–**4**க்குட்பட்ட **36, 37, 43, 44, 45, 46, 47** மற்றும் **48** வார்டு பகுதிகளில் Development charges fund & KNMT திட்டப் பணிகளின் கீழ் மழைநீர் வடிகால் கட்டும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், குழாய் பகிர்மானக் குழாய்கள் பழுதடைந்து பொதுமக்களுக்கு சீராக குடிநீர் வழங்க இயலவில்லை. எனவே மழைநீர் வடிகால் கட்டும் பகுதிகளில் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் சுமார் **1.00**கி.மீ நீளத்திற்கு பழுதடைய வாய்ப்புள்ளதால், அப்பகுதிகளில் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் மற்றும் போர்வெல் குழாய்களின் சின்டெக்ஸ்க்கு செல்லும் குழாய்கள் பழுதடைவதால் சுமார் **1.00**கி.மீ நீளத்திற்கு 40mm மற்றும் 32mm pvc குழாய்களை பதிக்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**9.80** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**1.** மாமன்றம் அனுமதிக்கலாம்

**2.**மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**3.**மேற்கண்ட பணிகளின் அவசர அவசியம் கருதி, மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றம் அங்கீகரிக்கலாம். **(இ1/2025)**

**தீர்மான எண்.2847** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**64.**கரூர் மாநகராட்சி மண்டலம்–4, வார்டு எண்.36 திருமாநிலையூர் கிழக்கு தெருவிலுள்ள குறுக்கு சாலைகளில், சிமெண்ட் கான்கிரீட் சாலை பழுதடைந்து உள்ளதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, மேற்படி திருமாநிலையூர் கிழக்குத் தெருவிலுள்ள குறுக்கு சாலைகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலை புதுப்பிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றம் அனுமதிக்கலாம்
3) மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/2025)**

**தீர்மான எண்.2848** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**65.**பொதுமக்கள் பங்கேற்புடன் வார்டு அளவிலான சபா கூட்டங்கள் நடத்துமாறு அரசாணை (நிலை) எண்.324 நாள்.17.10.2025 அன்று உத்திரவிடப்பட்டது. அதன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் 27.10.2025 முதல் 29.10.2025க்குள் அனைத்து வார்டுகளிலும் சிறப்பு கூட்டம் நடத்தி முடிக்குமாறு சுற்றறிக்கை 18.10.2025ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கரூர் மாநகராட்சி மண்டலம்–4க்குட்பட்ட பகுதிகளில் சபா கூட்டம் நடத்த சாமியான பந்தல், மேசை, நாற்காலிகள், மின்விளக்கு, தண்ணீர் மற்றும் ஒலிபெருக்கி தேவைப்படுகிறது. இப்பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.00/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி சட்டம் விதி 57(7) பிரிவின் கீழ் மேற்கொண்டதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

3.மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2025)

**தீர்மான எண்.2849** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**66.**கரூர் மாநகராட்சி மண்டலம்–1, 2, 3 மற்றும் 4க்குட்பட்ட 48 வார்டு பகுதிகளில் பொதுமக்கள் பங்கேற்புடன் வார்டு அளவிலான சபா கூட்டங்கள் நடத்துமாறு அரசாணை (நிலை) எண்.324 நாள்.17.10.2025 அன்று உத்திரவிடப்பட்டது. அதன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் 27.10.2025 முதல் 29.10.2025க்குள் அனைத்து வார்டுகளிலும் சிறப்பு கூட்டம் நடத்தி முடிக்குமாறு சுற்றறிக்கை 18.10.2025ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கரூர் மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட 41 மற்றும் 42 வார்டு பகுதிகளில் 27.10.2025ம் தேதியன்று நடைபெற்ற வார்டு சிறப்புகூட்டத்தில் ஒவ்வொரு வார்டுளிலும் பொதுமக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான மூன்று பணிகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதின் பேரில் மண்டலம்–3ல் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ளுவதற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 41 | ஜீவா நகர் முதல் தெருவில் உள்ள பொதுக்கிணற்றை சுத்தம் செய்து சுற்றிலும் வேலி அமைத்து இரும்பிலான மூடி அமைத்தல் | 2.00 |

| | | | |
|---|---|---|---|
| 2 | 41 | கணபதிபாளையம் வடக்கு நான்காவது குறுக்குத் தெருவில் தார்சாலை புதுப்பித்தல் பணி | 7.00 |
| 3 | 42 | தாந்தோணிமலை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி தெற்கு புறத்தில் உள்ள பழைய பழுதடைந்த கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி மைதானம் மற்றும் கழிப்பறை வசதிகள் செய்யும் பணி | 5.00 |
| | | **மொத்தம்** | **14.00** |

மேற்கண்ட மூன்று பணிகளில் வரிசை எண்.1 மற்றும் 2 பணிகளை பொது நிதியின் கீழ் மற்றும் வரிசை எண்.3 பணியினை கல்வி நிதியின்கீழ் மேற்கொள்ளவும், தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.14.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதி மற்றும் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்கண்ட பணிகளின் அவசர அவசியம் கருதி, மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம். (இ1/2025)

**தீர்மான எண்.2850** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

67.திருமதி.மஞ்சுளா பெரியசாமி 12–வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன் மொழிவதாக உள்ள தீர்மானம்.

கரூர் வட்டம், பசுபதிபாளையம் 12வது வார்டு, மண்டலம்–3 வடக்குத் தெருவில் சர்ச் எதிர்புறம் அமைந்துள்ள சிறிய அளவுள்ள குறுக்கு சந்து அப்பகுதி மக்களுக்கு நடைபாதையாக உள்ளது. இந்த இடத்தில் வடிகால் வசதி இல்லாததால் மழைநீர் தேங்கிவுள்ளதால் அப்பகுதி மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதால் துரித நடவடிக்கை எடுத்து மழைநீர் வடிகால் மற்றும் சாக்கடை வசதி அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2851** திருமதி.மஞ்சுளா பெரியசாமி 12–வது மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன் மொழிந்து திருமதி.செ.சரண்யா 13வதுவார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழி மொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

68.திருமதி.மஞ்சுளா பெரியசாமி 12–வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

கரூர்வட்டம், பசுபதிபாளையம் 12வது வார்டு, மண்டலம்–3 வடக்குத்தெருவில் சர்ச் முன்புறம் பகுதியில் வசிக்கும் மக்களின் வீடுகள் சிறிய வீடுகள் ஆகும். அந்த வீடுகளில் நீர்த்தேக்கத்தொட்டி ஏதும் இல்லாத காரணத்தால் அவர்களுக்கு பயன்பெறும் வகையில் புதிதாக ஒரு சின்டெக்ஸ் டேங்க் அமைத்து கொடுத்தால் அவர்களுக்கு பயன் உள்ளதாக இருக்கும் என்பதால் துரிதகால நடவடிக்கையாக இப்பணிகள் செய்துதர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2852** திருமதி.மஞ்சுளா பெரியசாமி 12–வது மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன் மொழிந்து திருமதி.செ.சரண்யா 13வதுவார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழி மொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

69.திரு.ஆ.தண்டபாணி 41–வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

ஜே.ஜே நகர் 1,2,3 ஆகிய மூன்று தெருக்களில் 1வது தெருவுக்கு மட்டும் தார் சாலை தற்போது ஒப்பந்தமானது. ஆனால் பொதுமக்கள் எங்களுக்கு மழை நீர் வடிகால் அமைப்பு ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு பிறகு தான் தார் சாலை போட வேண்டுமென மக்கள் தினமும் வந்து என்னை கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். என் வீட்டில் தினமும் 10 பேர் வந்து இதைப்பற்றி விசாரித்து கொண்டே இருக்கிறார்கள். ஆகையால் ஜே.ஜே நகர் பகுதியில் உள்ள மூன்று தெருக்களுக்கும் மழைநீர் வடிகால் அமைப்பும் மற்றும் தார்ரோடும் சேர்த்து அமைத்து தரவும்

ஜீவா நகர் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள மழைநீர் வடிகால் பாலம் மிகவும் பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் வெளியேறாமல் அடைத்துக்கொண்டு அந்த இடமே துர்நாற்றம் வீசுகிறது. ஆகையால் பாலத்தை இடித்து விட்டு புதியதாக பாலம் கட்டித்தரவும்.

கணபதிபாளையம் வடக்கு ஐந்தாவது தெருவில் உள்ள இரு சிறிய மழைநீர் வடிகால் பாலங்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் கழிவுநீர் வெளியேறாமல் அடைத்துக்கொண்டு அந்த இடமே துர்நாற்றம் வீசுகிறது. ஆகையால் இதனையும் இடித்து விட்டு புதிதாக பாலம் அமைத்துதரவும்.

பசுபதி நகர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தார் ரோடு மற்றும் மழைநீர் வடிகால் அமைத்து தரவும்.

விக்னேஸ்வரா நகர் விஸ்தரிப்பு சக்தி நகரில் (பசுபதி நகர் எதிர்புறம்) மண் சாலையை தார் சாலையாக மாற்றி தரவும் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்து தரவும்.

ஜீவாநகர் பகுதியில் உள்ள வாட்டர் டேங்குக்கு காம்பவுண்ட் சுவர் கட்டி முடிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் முடிந்தது. ஆனால் உள்ளே பேவர் பிளாக் கல் இன்னும் போடவில்லை. அதனை போட்டுத்தரவும்.

விக்னேஷ்வரா நகர் பகுதியில் விளையாட்டு மைதானத்திற்கு காம்பவுண்ட் சுவர் எழுப்பப்பட்டு இரண்டு ஆண்டுகள் முடிந்தது. ஆனால் மைதானத்திற்கான உபகரணங்கள் ஏதும் இன்று வரை வரவில்லை உடனே அமைத்துதர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2853** திரு.ஆ.தண்டபாணி 41–வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன் மொழிந்து திருமதி.க.சரஸ்வதி 40வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழி மொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மேயர்**
**கரூர் மாநகராட்சி**